பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

இலங்கை மதுவரித் திணைக்களம்

இலங்கை மதுவரித் திணைக்களத்தின் மதுவரிப் பரிசோதகர் பதவிக்கு ஆட்சேர்ப்பு - செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026

இலங்கை மதுவரித் திணைக்களத்தில் வெற்றிடமாக உள்ள ஐம்பத்து நான்கு (54) மதுவரிப் பரிசோதகர் பதவிகளுக்கு திறந்த போட்டிப் பரீட்சை மூலம் ஆட்சேர்ப்பு செய்வதற்காகத் தகுதியுடைய இலங்கைப் பிரசைகளிட மிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதற்கான விண்ணப்பப்படிவம் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் இணையத் தளமான www.doenets.lk இல் "எமது சேவைகள்" என்பதன் கீழ் "நிகழ்நிலை விண்ணப்பங்கள் (ஆட்சேர்ப்பு/வினைத்திறன் தடைகாண் பரீட்சைகள்)" (எனும் பகுதியில் வெளியிடப்பட்டுள்ளது. விண்ணப்பங்களை நிகழ்நிலைவழியாக மட்டுமே சமர்ப்பிக்க முடியும். இணையவழி விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் வசதி 2026, நவெம்பர் 09 ஆந் திகதி காலை 9.00 மணிக்கு ஆரம்பித்து 2026, திசெம்பர் 07 ஆம் திகதி பி.ப. 9.00 மணிக்கு நிறைவடையும்.

விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதைக் கடைசித் திகதி வரை தாமதப்படுத்துவதால் ஏற்படும் எவ்வித சிக்கல்களுக்கும் விண்ணப்பதாரரே பொறுப்பேற்றல் வேண்டும்.

இந்தத் திறந்த போட்டிப் பரீட்சையானது பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2027, பெப்புருவரி மாதம் கொழும்பில் நடத்தப்படும்.

01. **ஆட்சேர்ப்பு முறை :**

பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடத்தப்படும் எழுத்து மூலப் போட்டிப் பரீட்சை மற்றும் அதனைத் தொடர்ந்து தகுதிகாண் நேர்முகப் பரீட்சை ஆகியவற்றில் பெறப்பட்ட மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில், தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்கள் தரவரிசைப்படுத்தப்பட்டு வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப மேற்படி பதவிகளுக்குத் தெரிவு செய்யப்படுவார்கள்.

பதவியின் பொதுவான கடமை விபரம்:

மதுவரிச் சட்டம், விஷங்கள், அபின் மற்றும் அபாயகர அவுடதங்கள் சட்டம் மற்றும் புகையிலை வரிச் சட்டம் என்பன தொடர்பான கடமைகளை நிறைவேற்றுதல். அலுவலக நிர்வாகம் மற்றும் மேற்பார்வைக் கடமைகளைப் புரிதல்.

02. **சம்பள அளவுத்திட்டம் :**

R.S 4- 2025 இன் கீழ் (அ. நிர்வாகச் சுற்றறிக்கை இல. 10/2025 இற்கு அமைய) ரூ. 63,070.00 - 24 x 1,190 - ரூபா 91,630.00 மாதாந்த சம்பளம்.

03. **வயதெல்லை :**

விண்ணப்பதாரர்கள் 2026.12.07 ஆந் திகதி 21 வயதுக்கும் குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். (மதுவரித் திணைக்களம்சார் பதவியில் ஏற்கனவே உள்ள பட்டதாரிகளுக்கு வயது வரையறை இல்லை.)

அதற்கிணங்க 1991.12.07 ஆந் திகதி அல்லது அதற்குப் பின்னரும் 2005.12.07 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னரும் பிறந்தவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கத் தகுதியடையவர்கள் ஆவர்.

04. **கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் :**

I. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பட்டம் பெற்றிருத்தல் அல்லது பல்கலைக் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டங்களை வழங்கும் நிறுவனம் ஒன்றிலிருந்து பட்டம் பெற்றிருத்தல்.

II. க.பொ.த. (சா./தர.) பரீட்சையில் கணிதம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களில் திறமைச்சித்தி (Credit) பெற்றிருத்தல்.

4.1 **உடல்சார் தகைமைகள் :**

I. குறைந்தபட்ச உயரம் (காலணிகள் இன்றி) 5 அடி 6 அங்குலமாக இருக்க வேண்டும். மார்பளவு உள்ளிழுக்கப்படாத நிலையில் 33 அங்குலமாக இருக்க வேண்டும்

II. மூக்குக் கண்ணாடிகள் அல்லது கண்ணாடி வில்லைகள் இன்றி, குறைந்தது 6/6 மற்றும் 6/12 என்ற அளவிலான பார்வைத் திறன் (பொருட்களை அடையாளம் காணும் திறன் உட்பட) இருத்தல் வேண்டும்

III. நாட்டின் எந்தப் பகுதியிலும் பணியாற்று வதற்குத் தேவையான உடல் மற்றும் உள ஆரோக்கியம் கொண்டிருத்தல் வேண்டும்.

4.2 **ஏனைய தகைமைகள் :**

I. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

II. விண்ணப்பதாரர் நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.

SINCE 2014 Gazette.lk AMBITIONS REALIZED

புள்ளிகள் ஒதுக்கீட்டிற்கான தலைப்புகள்	*அதிகபட்ச புள்ளிகள்*
மேலதிக கல்வித் தகைமைகள் : முதுகலைப் பட்டம், பட்டப்பின் படிப்பு டிப்ளோமா, அடிப்படைத் தகுதிக்கு மேலான பட்டம் மற்றும் முதல் பட்டப்படிப்பில் பெற்ற தரநிலை எய்துகைகளின் அடிப்படையில் அமையும் தகைமைகள்	20
1. **மொழித் தேர்ச்சி**	10
2. **விளையாட்டுத் திறன்கள்** தேசிய மாகாண, மாவட்ட, பிராந்திய மற்றும் பாடசாலை மட்டப் போட்டிகளில் பல்வேறு விளையாட்டுகளில் பதிவு செய்யப்பட்ட சாதனைகளுக்காக	35
3. **ஏனைய திறன்கள்** **விசேட பயிற்சி** மாணவர் படையணி/ தன்னார்வலர் சேவை, தற்காப்புப் போர் முறைகள் அல்லது தொழில்நுட்பப் பயிற்சி **பாடத்திட்டம் சாரா செயற்பாடுகள்**	30
4. **நேர்முகப் பரீட்சை சபையின் மதிப்பீடுகள்**	05
மொத்தம்	100

எழுத்துப் போட்டிப் பரீட்சை குறித்த விவரங்கள்

பரீட்சைக்கான பாடத்திட்டம்:

வினாத்தாள்		*பாடத் திட்டம்*	
வினாத்தாளின் பெயர்	*காலம்*	*மொத்தப் புள்ளிகள்*	*சித்திப் புள்ளிகள்*
01. உளச்சார்பு	01 மணி	100	40%
02. பொது வினாத் தாள்	01 மணி	100	40%
01. உளச்சார்பு		இது விண்ணப்பதாரரின் நுண்ணறிவு பகுத் தறிவு மற்றும் தீர்மான மெடுக்கும் திறனைச் சோதிக்க எதிப்பார்க்கப் படுகிறது. (இதில் கணிதம்/எண் புதிர்கள் ஒத்த/ எதிர் சொற்களை எழுதுதல். சொற்றொடர்/வாக்கியம் தொடர்பான கேள்விகளும் அடங்கும்).	

வினாத்தாள்	*பாடத் திட்டம்*
02. பொது வினாத்தாள்	இலங்கை மற்றும் உலக அளவில் நடைபெறும் சமகால நிகழ்வுகள் மற்றும் சமூக நிகழ்வுகள் குறித்த தகவல்கள் மற்றும் பொது அறிவை மதிப்பிடுதல்.

தகைமை மதிப்பீட்டிற்கான நேர்முகப் பரீட்சை :

எழுத்துப் பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரர்கள், தகுதியை மதிப்பீடு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். எழுத்துப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை ஆகியவற்றில் பெற்ற மொத்த புள்ளிகளின் அடிப்படையில் அமையும் தரவரிசை மற்றும் கிடைக்கக்கூடிய வெற்றிடங்களின் எண்ணிக்கை ஆகியவற்றைக் கொண்டு ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும். இருப்பினும், இலங்கை மதுவரித் திணைக்களம் சில வெற்றிடங்களை நிரப்பாதிருப்பதற்கு தீர்மானிக்கக்கூடும்.

தகுதியை மதிப்பிடுவதற்கான நேர்முகப் பரீட்சையின் போது, கல்வித் தகைமைகள் மற்றும் பிற தகைமைகளுக்கு பின்வருமாறு புள்ளிகள் வழங்கப்படும்.

05. **சேவை நிபந்தனைகள் :**

I. அரச கரும மொழிகள் சட்டம் மற்றும் அவ்வப்போது அரசாங்கத்தினால் இயற்றப்படும் அனைத்துச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமையச் செயற்படுவதற்கு கட்டுப்படுதல் வேண்டும்.

II. 2022.12.14 ஆம் திகதியிடப்பட்ட 2310/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட நடைமுறை விதிகளின் (Procedural Rules) அத்தியாயம் I, அத்தியாயம் III, அத்தியாயம் VII மற்றும் அத்தியாயம் VIII ஆகியவை இதற்கு ஏற்புடையதாகும்.

* கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு முன்னதாக விண்ணப்பதாரர்களின் உடல் தகுதிகள் சரிபார்க்கப்படும்.

06. **பயிற்சிக் காலம் :**

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்களுக்கு 3 மாத காலப் பயிற்சி வழங்கப்படும். இந்தப் பயிற்சியின் இறுதியில் நடத்தப்படும் பரீட்சையில் சித்தியடையத் தவறுபவர்களின் பயிற்சி இடைநிறுத்தப்படும். பயிற்சிக் காலத்தின் போது, பயிற்சியாளர்களுக்கு மாதாந்த கொடுப்பனவாக ரூ. 20,000.00 வழங்கப்படும்.

07. **தகுதிகூர் காலம் :**

பயிற்சியை வெற்றிகரமாக நிறைவு செய்யும் விண்ணப்பதாரர்கள் மூன்று (3) வருட தகுதிகூர்

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

காலத்திற்கு உட்பட்டு, மதுவரிப் பரிசோதகர் பதவிக்கு நியமிக்கப்படுவார்கள் தகுதிகூர் காலத்தின் இறுதியில் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு நடத்தப்படும் வினைத்திறன் தடைகாண் பரீட்சையில் சித்தியடைந்ததும் அவர்கள் உரிய பதவியில் உறுதிப்படுத்தப்படுவார்கள்.

7.1 குறித்த திகதியில் பணியில் சேரத் தவறும் விண்ணப்பதாரர்களின் நியமனத்தை இரத்துச் செய்வதற்கும், அல்லது தமக்கு ஒதுக்கப்பட்ட பதவி அல்லது பிராந்தியத்தில் பணியில் சேருவதை மறுக்கும் அல்லது தவிர்த்துக்கொள்ளும் விண்ணப்பதாரர்களின் நியமனத்தை இரத்துச் செய்வதற்கும் மதுவரி ஆணையாளர் நாயகத்திற்கு அதிகாரம் உண்டு

08. **பரீட்சை மொழி மூலம் :**

(a) இந்தப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடத்தப்படும்.

(b) விண்ணப்பதாரர்கள் தங்களுக்கு விருப்பமான மொழி மூலத்தில் பரீட்சைக்குத் தோற்றலாம்.

குறிப்பு :

(i) விண்ணப்பதாரர்கள் இந்தப் பரீட்சையின் அனைத்து வினாத்தாள்களுக்கும் ஒரே மொழி மூலத்திலேயே விடையளிக்க வேண்டும்.

(ii) விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட மொழி மூலத்தை மாற்றிக்கொள்ள எந்தவொரு விண்ணப்பதாரருக்கும் அனுமதி இல்லை.

(iii) ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இரண்டு (02) வினாத்தாள்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

09. **பரீட்சை விண்ணப்பங்கள் :**

இணையவழி (Online) பரீட்சை விண்ணப்பங்கள் ஆங்கில மொழியில் மட்டுமே பூரத்தி செய்யப்பட வேண்டும். இணைய வழியாகச் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பம் செல்லுபடியாகும் விண்ணப்பமாக ஏற்றுக் கொள்ளப்பட்டதா என்பது குறித்து விண்ணப்பதாரர் பயன்படுத்திய கைப்பேசி இலக்கத்திற்கு குறுஞ்செய்தி (SMS) மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ திணைக்களத்தினால் அறிவிக்கப்படும் இணையவழி விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்வதற்கு முன், பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காகத் தயாரிக்கப்பட்ட அறிவுறுத்தல் தாளைப் பதிவிறக்கம் செய்து விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்யும் போது அந்த அறிவுறுத்தல்களைச் சரியாகப் பின்பற்றவும். விண்ணப்பத்தின் அச்சிடப்பட்ட பிரதியைப் பெற்ற பின்னர் அதில் செய்யப்படும் எந்தத் திருத்தங்களும் செல்லுபடியாகாது. முழுமையற்ற விண்ணப்பங்கள் முனைறிவிப்பின்றி நிராகரிக்கப்படும்.

10. **பரீட்சைக் கட்டணம் ரூ. 1,200.00 ஆகும்.** பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தும் போது, இணையவழி முறையால் வழங்கப்படும் பின்வரும் கொடுப்பனவு முறைகளின் கீழ் மட்டுமே பணம் செலுத்தப்பட வேண்டும்.

(i) ஏதேனும் வங்கிக் கடன் அட்டைகள் மூலம் ;

(ii) இணையப் பரிவர்த்தனை வசதியுடன் கூடிய ஏதேனும் வங்கிப் பற்று அட்டை மூலம் ;

(iii) இலங்கை வங்கியின் இணையவழி வங்கி முறை/ ஃப்ளெக்ஸ் செயலி மூலம்;

III. இலங்கை வங்கியின் ரெல்லா சீட்டுக் கொடுப்பனவு செலுத்துதல் மூலம் பணம் செலுத்துதல்.

குறிப்பு:

(a) மேற்குறிப்பிட்ட முறைகளின் ஊடாகக் கொடுப்பனவைச் செலுத்துவது தொடர்பான அறிவுறுத் தல்கள், இணையதளத்தில் பரீட்சை சார்ந்த தொழில்நுட்ப வழிகாட்டல்களின் கீழ் வெளியிடப்பட்டுள்ளன.

(b) கட்டணம் பெறப்பட்டமை குறித்து குறுஞ்செய்தி (SMS) அல்லது மின்னஞ்சல் வாயிலாக அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணத்தை முழுமையாகச் செலுத்த வேண்டும். நிரணயிக்கப்பட்ட தொகையை விடக் குறைவாகவோ அல்லது அதிக மாகவோ செலுத்தப்பட்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். குறிப்பிடப்பட்ட கட்டணச் செலுத்தல் முறைகளைப் பயன்படுத்திப் பணம் செலுத்தும்போது ஏற்படும் தவறுகளுக்கு, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் பொறுப் பேற்காது.

(c) பரீட்சைக்காகச் செலுத்தப்பட்ட கட்டணங் கள், எக்காரணம் கொண்டும் மீள வழங்கப்படமாட்டாது அல்லது வேறொரு பரீட்சைக்கு மாற்றப்பட மாட்டாது.

11. அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டவர்கள் மட்டுமே விண்ணப்பித்துள்ளனர் என்ற அனுமானத்தின் அடிப்படையில், விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டிய இறுதித் தேதிக்குள் அல்லது அதற்கு முன்னதாக, முழுமையான விண்ணப்பங்களைச் சரியாகச் சமர்ப்பித்த விண்ணப்பதாரர்களுக்கு மட்டுமே. பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் இணையவழியில் அனுமதி அட்டைகள் வழங்கப்படும். அனுமதி அட்டைகள் வெளியிடப்பட்டவுடன், இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் அது குறித்து இணைய அறிவித்தல் அல்லது குறுஞ்செய்தி (SMS) வாயிலாக விண்ணப்பதாரர்களுக்குத் தெரிவிக்கப் படும்.

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

எவரேனும் விண்ணப்பதாரருக்கு அனுமதி அட்டை கிடைக்கப் பெறவில்லையெனில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் நிறுவனப் பரீட்சை நடவடிக்கைப் பிரிவின் ஊடாக அது குறித்து விசாரித்து அறிந்து கொள்ளல் வேண்டும். இத்தகைய விசாரணைகளின் போது, இணைய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு ஒரு கோரிக்கைக் கடிதத்தை அனுப்புதல் மிகவும் பொருத்தமானதாகும். அதில் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி ஆகிய விவரங்களைச் சரியாகக் குறிப்பிட வேண்டும். அத்தகை விசாரணையின் போது பரீட்சைகள் திணைக்களம் கோரும் தகவல்களை உறுதிப்படுத்துவதாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தின் பிரதி மற்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டு ஆகியவற்றைத் தயாராக வைத்திருத்தல் பயனுள்ளதாக இருக்கும். அனுமதி அட்டையைச் சரிபார்த்து, அதில் ஏதேனும் திருத்தங்கள் தேவைப்படின், பரீட்சை நடைபெறும் முன்பே பரீட்சைகள் திணைக்களதைத் தொடர்புகொண்டு விண்ணப்பத்தின் அடிப்படையில் உரிய திருத்தங்களைச் செய்துகொள்ளல் வேண்டும். பரீட்சை மண்டபத்திலோ அல்லது நேர்முகப் பரீட்சையின் போதோ செய்யப்படும் திருத்தக் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

ஒரு விண்ணப்பதாரருக்கு அனுமதி அட்டை வழங்கப் படுதல் அவர் பரீட்சையில் தோற்றுவதற்கு அல்லது குறிப்பிட்ட பதவிக்குத் தகுதியானவர் என்பதற்கு அங்கீகாரம் அளித்ததாகக் கருதப்படக்கூடாது.

பரீட்சைக்குத் தோற்றும் முதல் நாளன்று கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையை பரீட்சை மண்டபப் பொறுப்பாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

12. விண்ணப்பதாரர்கள் தாங்கள் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும், பரீட்சை மண்டபத்திற்குள் பரீட்சை மேற்பார்வையாளருக்குத் திருப்தியளிக்கும் வகையில் தமது அடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். இதற்குப் பின்வரும் ஆவணங்கள் மட்டுமே செல்லு படியாகும்:

(அ) தேசிய ஆளடையாள அட்டை (NIC) ;

(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு (Passport);

(இ) செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்.

மேலும், விண்ணப்பதாரர்கள் தமது அடையாளத்தைச் சரிபார்க்கும் வகையில் முகத்தை மறைக்காமலும், இலத்திரனியல் தகவல் தொடர்பு சாதனங்கள் எதையும் அணியவில்லை என்பதை உறுதிப்படுத்தும் வகையில் காதுகளை மறைக்காமலும் பரீட்சை மண்டபத்திற்குள் நுழைய வேண்டும். இதற்கு இணங்காத விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள். அத்துடன், பரீட்சை மண்டபத்திற்குள் நுழைந்த தருணத்திலிருந்து, பரீட்சை முடிந்த பின் வெளியேறும் வரை விண்ணப்பதாரர்கள் தமது முகத்தையோ அல்லது காதுகளையோ மறைக்காமல் இருத்தல் வேண்டும்.

13. பரீட்சை அனுமதி அட்டையில் உள்ள விண்ணப்ப தாரரின் கையொப்பம் சான்றுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

14. விண்ணப்பதாரர்கள், பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப் பட்ட விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்குக் கட்டுப்பட்டவர்கள் ஆவர். இந்த விதிகள் மீறப்படும் பட்சத்தில், பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு விண்ணப்பதாரர்கள் ஆளாக நேரிடும்.

15. பெறுபேறுகளை வெளியிடுவதற்கான பொருத்தமான திகதியை நியமன அதிகார பீடம் அறிவித்ததும், இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், பரீட்சையில் தோற்றிய அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும், எழுத்துப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திலும் பெற்ற புள்ளிகள்/ மொத்த புள்ளிகள் அடங்கிய பெறுபேற்றுத் தாள்கள், தபால் மூலம் அனுப்பப்படும் அல்லது www.results.exams.gov.lk எனும் இணையத்தளம் ஊடாக பெறுபேறுகள் வெளியிடப்படும். "பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எடுக்கும் தீர்மானமே இறுதியானது."

16. சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்பட்டுள்ள இந்த அறிவித்தலின் உள்ளடக் கங்களுக்கு இடையே ஏதேனும் முரண்பாடுகள் அல்லது வேறுபாடுகள் காணப்படுமிடத்து, சிங்கள மொழியில் உள்ள அறிவித்தலிற்கமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

எம். பி. என். ஏ. பேமரத்ன,
மதுவரி ஆணையாளர் நாயகம்,
இலங்கை மதுவரித் திணைக்களம்.

11-72

SINCE 2014 Gazette.lk AMBITIONS REALIZED